## பத்திரப் பதிவு அலுவலகங்கள்.

*வினா 493.—திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் உள்ள "பத்திரப் பதிவு" (Sub Registrar's Office) அலுவலகங்கள் மிகவும் பாழடைந்தும், வெளிச்சம், காற்று இல்லாத நிலையில் இருப்பதனை மாற்றி நல்ல முறையில் பணிபுரிவதற்கு ஏற்ற வகையில் ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: அரசுக் கட்டிடங்கள் கட்டும்போது பொதுப்பணித் துறையினரே மேற்படி கட்டிடத்தில் எல்லா வசதிகளையும் செய்து கட்டிடத்தினை வடிவமைத்து கட்டுகின்றனர். தனியார் கட்டிடத்தில் செயல்படும் பொதுவாக எல்லா பதிவு அலுவலகங்களிலும் மின் விளக்கு, மின் விசிறி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, வாணியம்பாடியிலே சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் ஒன்று இருக்கிறது. அது எப்போது இடிந்து விழுந்துவிழுமோ என்ற நிலையில் இருக்கிறது. மழைக் காலங்களில் மழைத்தண்ணீர் எல்லாம் இந்த அலுவலகத்திற்குள்ளே வந்து பைல்கள் எல்லாம் நனைந்து விடும் அளவுக்கு மிகவும் மோசமாக இருக்கிறது. அதைப் புதிதாகத் திருத்தி அமைக்கும் திட்டம் இந்த அரசிடம் இருக்கிறதா என்பதையும், அதே நேரத்தில் அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்தில் எழுதுகின்ற எழுத்தர்களுக்குத் தங்க இடம் இல்லாமலும், வருகின்ற பொது மக்களும் இடம் இல்லாமலும் மிகவும் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. இதற்குத் தேவையான மாற்று இடம் கொடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பத்திரப் பதிவு அலுவலகத்தைப் பற்றித் தனியாக என் கவனத்திற்குக் கொண்டு வருவாரானால், அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

1978 மார்ச் 10]

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலே பங்கா இழுக்கும் முறையிருந்து வருகிறது. அந்த பங்கா இழுக்கும் முறையை நிறுத்திவிட்டு, மின் வசதி பொறுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : அநேகமாக பத்திரப் பதிவு அலுவலகங்கள் எல்லாவற்றிலும் பங்கா இழுக்கும் முறையை மாற்றி, மின் வசதிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இந்த முறை இன்னும் இருந்து மின் வசதி கொடுக்கப்படாமல் இருந்தால், அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பாக சர்க்காரால் கட்டப்பட்ட கட்டடங்களில் இத்தகைய வசதிகள் இல்லாத காரணத்தினால், அவைகளை மீண்டும் திருத்தி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தக் கட்டடத்தைப் பற்றிச் சொல்கிறார் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சேலம் போன்ற பெரிய நகரங்களில் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டடங்களில்தான் இந்த பத்திரப் பதிவு அலுவலகங்கள் இருக்கின்றன, எந்தவிதமான நவீன வசதிகளும் இல்லாமல் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதை மாற்றி புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகங்கள் அதேபோல சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் எங்கெங்கெல்லாம் இயங்கிக் கொண்டிருக்கிறதோ, அங்கே எல்லாம் சொந்தத்தில் கட்டடங்களைக் கட்டி அவற்றிலே அந்த அலுவலகங்களை வைக்க வேண்டும் என்ற

முயற்சியிலே இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்தும் ஏற்கனவே குறிப்புகள் கோரப்பட்டுள்ளன. அவைகள் வந்த பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகங்கள் உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறைந்த தொகையிலே கிராமப்புறங்களிலே இதைப் போன்ற பத்திரப்பதிவு அலுவலகங்கள் வாடகைக்கு இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டடங்கள் விலைக்கு வருகிறபோது அதை வாங்கக் கூடாது என்று அரசின் கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையை மாற்றி அமைத்து அத்தகைய கட்டடங்களை விலைக்கு வாங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** கட்டடங்களைப் புதிதாக கட்டுவதுதான் உசிதம் என்று அரசு கருதுகிறதே தவிர பழைய கட்டடங்களை விலைக்கு வாங்குவது அவ்வளவு சரியில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

**திரு. கூ. ச. முருகேசன் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலே உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருப்பது அரசுக்குத் தெரியுமா. அத்தகைய இடங்களில் அரசு கட்டிடங்களைக் கட்டி, அரசு வாடகைக் கொடுப்பதை நிறுத்தி அரசு வருமானத்தைப் பெருக்குவதற்கு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே எழுப்பிய துணை வினாவிற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

### பொறியியல் படிப்புக்கு மாணவர் தேர்வு.

* **வினா 494—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

*1977-78 கல்வி ஆண்டில், இன்ஜினீரிங் கல்லூரி பெண்கள், ஆண்கள் பாலிடெக்னிக் முதலியவைகளுக்கு மாணவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?*